TAMIL / TAMIL

# கனடாவிற்கான கொவிட்-19 தடுப்பூசியை பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டியது

*கனேடியர்களுக்கான பாதுகாப்பான வினைத்திறன் மிக்க கொவிட்-19 தடுப்பூசியை கொண்டு வருவதற்காக உழைக்கின்றோம்*

தொற்று நோய் பரவலை தடுப்பதற்கும், அதன் தாக்கத்தை குறைப்பதற்கும், காலத்துக்கு காலம் ஏற்படும் காய்ச்சல் அல்லது சிறுபராய தொற்றாக இருந்தாலும், வினைத்திறன் மிக்க வழியாக தடுப்பூசி காணப்படுகிறது. ஒரு பாதுகாப்பான, வினைத்திறன் மிக்க, கொவிட்-19 தடுப்பூசி (கள்), இந்த புதிய கொரோனா வைரசிலிருந்து எம்மைப் பாதுகாப்பதோடு, கனேடியர்களினதும், உலக மக்களினதும் சாதாரண வாழ்க்கையை மீள ஆரம்பிக்க முக்கிய படியாக காணப்படுகிறது. கனேடிய அரசாங்கம், பாதுகாப்பான, வினைத்திறன் மிக்க தடுப்பூசிகளுக்காக எல்லா வகையான சாத்தியமான வழிகளாலும், பாதுகாப்பான அணுகல்களையும் அதனுடன் சம்பந்தப்பட்ட விநியோகத்தையும் கனேடியர்களுக்கு வழங்குவதற்காக உழைக்கின்றது. இதோ எதிர்கால கொவிட்-19 தடுப்பூசியைப்பற்றி கனேடியர்கள் அறிந்து கொள்ள வேண்டியது.

**பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க தடுப்பூசிகள் மாத்திரம் கனடாவில் பாவனைக்காக அங்கீகரிக்கப்படும்.** உலக நாடுகளிடையே மருந்துகள் தடுப்பூசிகளுக்கான மீளாய்வு, அங்கீகரித்தல், மற்றும் கண்காணிப்பு முறைகள் போன்றவற்றின் உயர் தரப்படுத்தலுக்காக மதிக்கப்படுகிறது; இவை எந்த வித உடன்படிக்கைகளுக்கும் உட்படாதது. கனேடிய அரசாங்கம் மிகுந்த நம்பிக்கைக்கு உரிய  தடுப்பூசி மனுச்செய்பவர்களுக்கான, உற்பத்தியாளர் மருத்துவ சோதனைதரவுகளுக்கு, நிகழ்நேர அணுகலைப் பெற்றுள்ளது**, மேலும் முறையான ஒப்புதல்கள் வழங்க முன்னர்**, உலகளாவிய ஒழுங்கு முறை சமுகத்துடன் இணைந்து, பாதுகாப்பான, வினைத்திறன் மிக்கதான தடுப்பூசியை உறுதிப்படுத்த உழைத்துக் கொண்டு இருக்கின்றோம்.

**ஒவ்வொருவரும் தடுப்பூசியை பெறக்கூடியதாக இருக்கும்**. முன்னர் எப்போதும் இல்லாத உலக நிதி உதவியாலும் மற்றும் ஒன்றிணைப்பாலும், 150 இற்கும் அதிகமான தடுப்பூசி மனுச்செய்பவர்கள் இந்த நேரத்தில் உலகெங்கும் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கனேடிய அரசாங்கமானது. கனடாவில்- தயாரிக்கப்பட்டது ஆய்வில் முதலீடு செய்து கொண்டிருக்கிறது மற்றும் ஏற்கனவே பல நூறு மில்லியன் மருந்து அளவிலான மேம்பட்ட கொள்வனவு ஒப்பந்தங்களை, உலகெங்கிலும் உள்ள மிகுந்த நம்பிக்கைக்குரிய தடுப்பூசி மனுச்செய்பவர்களுடன் மேற்கொண்டுள்ளது. அவை தயாரானவுடன் கனேடியர்களுக்கு இது பாதுகாப்பான மற்றும் வினைத்திறன் மிக்க அணுகலை வழங்கும். எல்லா தடுப்பூசிகளும் அதன் முடிவு நிலையை எட்டாது, ஆதலால் நாம் முன்கூட்டியே மிகுந்த நம்பிக்கைக்குரிய தடுப்பூசி மனுச் செய்பவர்களிடம் இருந்து குறித்த எண்ணிக்கையில் கொள்வனவு செய்கின்றோம். கனேடிய சுகாதாரமானது இயலுமான வரையில் மிக விரைவாக கொவிட்-19 தடுப்பூசிகளின் விமர்சனங்கள்

மற்றும் ஒப்புதல்களில் கவனம் செலுத்தியுள்ளதுடன் அவற்றை நன்றாக அறிதல் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றை உறுதி செய்துள்ளது.

**முதலில் மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளே இருப்பதால், ஒரு தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டதும் முக்கிய குடித்தொகைகளிற்கு முன்னுரிமை வழங்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது**. கனேடிய சுகாதாரம் தடுப்பூசி (கள்) யை கனடாவில் பாவிக்க அங்கீகாரம் தந்தவுடன், நாம் ஆரம்ப வாரங்கள் மற்றும் மாதங்களில் சில மில்லியன் மருந்தளவிலான மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தை பெற எதிர்பார்க்கின்றோம், இதன் கருத்து அரசாங்கங்கள் ஒன்றிணைந்து பணி புரிந்து சுயாதீன வல்லுநர்களின், தேசிய நோய்த்தடுப்பு ஆலோசனை வழங்கும் குழு போன்ற **(NACI ),** உள்ளீடுகளை தொடர்ந்தும் பெறுவர். இதன்மூலம் தடுப்பூசி வழங்கலை எவ்வாறு முன்னுரிமைப்படுத்துவது என்ற தீர்மானத்தை மேற்கொள்ளலாம். இதன் மூலம் உயர் அச்சுறுத்தலுக்குள்ளான குடித் தொகைகள், உலகத் தொற்றுக்கு பதிலளிப்பவர்கள், சமுகம், பொருளாதார ஓட்டம் போன்றவற்றிற்கு உதவி செய்பவர்களை பாதுகாப்பதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த எமக்கு அனுமதி கிடைக்கும். **தேவையானளவு தடுப்பூசி (கள்) கிடைக்கப்பெற்றவுடன் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு விஸ்தரிக்கப்படும்.**

**நோயெதிர்ப்பை கட்டியெழுப்ப காலம் தேவைப்படும்**. ஒரு குறிப்பிட்ட அளவு தடுப்பூசியானது, ஒரு தனிநபர் பாதுகாப்பிற்கு போதுமானதாக இல்லாதிருக்கலாம். உங்களிற்கு தேவையானளவு நோயெதிர்ப்பை உங்கள் உடல் விருத்தி செய்வதை அனுமதிக்க இரண்டாவது SHOT உம் தேவைப்படலாம். சமுக நோயெதிர்ப்பையடைய குடித்தொகையில் எந்த மட்டத்திலான நோயெதிர்ப்பு தேவை என்பது இன்னும் எமக்கு தெரியாது. அதுவரை கனேடியர்கள் கைகளை தொடர்ந்து கழுவ வேண்டும். உடல் நலக் குறைவின் போது வீட்டில் இருக்க வேண்டும், சரீர இடைவெளியை பேண வேண்டும், பொருத்தமான முகக் கவசம் அணிய வேண்டும், அத்துடன் தொடர்ந்து நல்ல இருமல் மற்றும் மேற்பரப்பு சுகாதாரத்தை பாவிக்க வேண்டும்.

**கொவிட்-19 தடுப்பூசிகள் இலவசமாக கிடைக்கப்பெறும்.** அதிகளவிலான தடுப்பூசிகள் உருவாக்கப்பட்டு விநியோகிக்கப்படும் போது, நாம் தடுப்பூசியொன்று தேவைப்படும் அனைத்து கனேடியர்களிற்கும் இலவசமாக அதனை வழங்க எதிர்பார்க்கிறோம். எமக்கு தெரியும், நாம் ஒரு உலகளாவிய சமுகத்தில் வாழ்கிறோம். எனவே நாம் உலகம் முழுவதிலும் உள்ள ஆகக் குறைந்த, மத்தியதர பொருளாதாரத்தை கொண்டவர்களும் இந்த பாதுகாப்பான, வினைத்திறன் மிக்க **கொவிட்-19** தடுப்பூசியை பெற முடியுமாக இருத்தல் வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.





**தடுப்பூசி என்பது உங்களையும், உங்கள் குடும்பத்தையும், உங்கள் சமுகத்தையும் பாதுகாக்க நீங்கள் எடுக்கும் தெரிவாக இருக்க வேண்டும்.** தடுப்பூசி என்பது ஒருவருடைய தனிப்பட்ட தெரிவு, கனேடியர்களில் அதிகமானோர் இது திடமான ஆரோக்கியதின் ஒரு பகுதி எனவும், தீவிர நோய்கள் வராமல் தடுப்பதற்கான முக்கியத்துவத்தையும் ஏற்றுக் கொள்கிறார்கள்.



**நாங்கள் கனேடியர்களுடன் இணைந்து உழைக்கவும், உங்களுக்கு தகவல்களை வழங்கி வைக்கவும் உறுதியாக உள்ளோம்.** சில விடயங்கள் மாறும் போது எமது அணுகு முறையும் மாறும். நாங்கள் தங்கி நிற்பது, கனடாவில் நன்கு நிறுவப்பட்ட பொது சுகாதார அமைப்பு, ஆராய்ச்சியாளர்களின் நுண்ணறிவு  நிபுணத்துவம், சுகாதார நிபுணர்கள், தொழில்துறை, சமுக தலைவர்கள், சுதேச அறிவாளர்கள் எங்களை வழி நடத்தி, கனேடியர்களுக்கு ஒரு பாதுகாப்பான, வினைத்திறன் மிக்க கொவிட்-19 தடுப்பூசியை பெறுவதற்கேயாகும். நீங்கள் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற Canada.ca/coronavirus  இல் நுழையவும்,  நம்பகத்தன்மையான மூலங்கள்  வாயிலான தகவல்களை நம்பவும்.